இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் (''நிறுவனத்தின்'') 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது

நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	நடைமுறையல்லாத பொறுப்புகளாகக் காட்டப்பட வேண்டிய ரூபா 2,458,479 தொகையான ஊழியர் கடன் சுழல் நிதியின் மீதி ரூபா 850,310 ஆன ஏனைய பங்களிப்புகள் மற்றும் ரூபா 60,754,680 ஆன பிற்போட்ட வருமானத்தின் மீதி ஆகியவை, இலங்கை பொதுத்துறை	2025 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் ஊழியர் கடன் சுழல் நிதி மற்றும் பிற்போடப்பட்ட வருமானம் நடப்பு அல்லாத பொறுப்பு களாகக் காண்பிக்கப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்கியல் நியமங் களின் படி நடப்பு அல்லாத பொறுப்பு களாகக் காட்டப்பட வேண்டிய உருப்படிகள் அவற்றின் கீழ் சரியாகக் காட்டப்பட வேண்டும்.

	கணக்கீட்டு நியமம் 01 இன் பந்தி 95 க்கு முரணான நிதி நிலை அறிக்கையில் நிகர சொத்துக்கள்/ உரிமைகளாகக் காண்பிக்கப்பட்டுள்ளன.		
(ஆ)	முன்னைய காலப்பகுதிக்கான பிழைகளைச் சீராக்குகையில் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் 47 ஆம் பந்தியின் படி பிழை ஏற்பட்ட காலத்திற்கான ஒப்பீட்டு மீதிகளை நிறுவனம் மீண்டும் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் நிறுவனத் தால் ரூபா 6,157,875 மதிப்புள்ள முன்னைய காலப்பகுதிக்குரிய 13 பிழைகளுக் கான சீராக்கத்தின் போது ஒப்பீட்டு மீதிகளை மீள குறிப்பிடப்பட்டிருக்க வில்லை.	2025 ஆம் ஆண்டு முதல் முன்னைய காலப்பகுதிக் கான பிழைகள் ஒப்பீட்டு ரீதியான தவறுகள் மீண்டும் குறிப்பிடப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கணக்கீட்டு நியமங் களுக்கு இணங்க முன்னைய காலப்பகுதிக் கான பிழைகளை சீராக்கம் செய்கையில் பிழைகள் நேர்ந்த காலப்பகுதிக்காக ஒப்பீட்டு ரீதியான மீதிகள் மீண்டும் குறிப்பிடப்பட வேண்டும்.
(இ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 10 இன் 20 ஆம் பந்தியின் படி, முடிவு சூழ்நிலையை கருத்திற்கொண்டு நிறுவனம் வருவாய் மற்றும் தொடர்புடைய செலவுகளை இனங்காண்கையில் அதன்படி செயற்படாது பாடநெறி வருமானம் அங்கீகரிக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 5,154,360 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும், நியமத்தின் 39(அ) இன் படி வருவாய் அங்கீகாரக் கொள்கை வெளியிடப்பட்டிருக்க வில்லை. பாடநெறிப் பெறுவனவுகளில் இருந்து ரூபா 7,232,524 2025 ஆம் ஆண்டிற்கு உரித்தாக பெறப்பட்டிருந்த போதிலும், அது முன்னர் பெறப்பட்ட வருமானமாக அங்கீகரிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிராமையால் அதே தொகையால் மிகை அதிகமாகவும் நடைமுறைப் பொறுப்புகள் குறைவாகவும் காண்பிக்கப் பட்டிருந்தது. 2024 ஆம் ஆண்டிற்கான ரூபா 7,281,724 ஆன பெறவேண்டிய பாடநெறி வருமானம் ரூபா 5,046,250 ஆகவும், ரூபா 2,235,474 குறைவாக அங்கீகரிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்ததன் காரணமாக, நடைமுறைச் சொத்துக்களும் மிகை, அதே	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 10 இன் 20 ஆம் பந்தியின் படி, 2025 ஆம் ஆண்டின் போது இறுதிக் கணக்கு களைத் தயாரிக்கும் போது, பயிற்சிப் பாடநெறிகளின் இறுதி முறையின் அடிப்படையில் பாடநெறி வருமானத்தை அங்கீகரித்து தொடர் புடைய நிதியாண்டிற்கான வருமானம், முன்னர் கிடைக்கப்பெற்ற வருமானம் மற்றும் பெறவேண்டிய பாடநெறி வருமானம் என கணக்கிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்கீட்டு நியமங் களுக்கு இணங்க சரியாக பாடநெறி வருமானம், முன்னர் பெறப்பட்ட பாடநெறி வருமானம், பெற வேண்டிய பாடநெறி வருமானம் கணக்கிடப் பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். வருமான அங்கீகாரக் கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிப் படுத்தப்பட வேண்டும்.

	தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.		
(ஈ)	மீளாய்வாண்டில், கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சால் பெறப்பட்ட ரூபா 15,657,141 தொகையான மூலதன மானியம் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் இல 11 இன் படி ஆண்டின் போது பரிமாற்றம் அல்லாத பரிவர்த்தனைகளிலிருந்து பெறப்பட்ட வருமானமாக அங்கீகரிக்கப்படாது பிற்போடப்பட்ட வருமானமாக காலக்கழிவு முறை கழிப்பில் மீதியில் உரிமைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தன.	உரிய அமைச்சால் மீளாய்வாண்டில் ரூபா 15,657,141 தொகை ஆதன, இயந்திர உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு வழங்கப்பட்டிருந்தது. நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட வருமானம் அல்ல என்பதால், குறித்த பரிவர்த்தனை ஒரு கட்டுப் பாட்டுக் கணக்கின் மூலம் பதிவு செய்யப்பட்டு, நிறுவனத்தின் ஆதன, இயந்திர மற்றும் உபகரணங்களில் ஏற்பட்ட அதிகரிப்பாகக் கணக்கிடப்பட்டுள்ளது.	கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கும் வகையில் மூலதன மானியப் பரிமாற்றம் அல்லாத பரிவர்த்தனைகளிலிருந்து வரும் வருமானமாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தப்படும் ஓர் செயற்திட்டத்தின் செலவுகள் அதிகாரசபையால் மீளளிக்கப் படுவதுடன் ஆண்டின் போது ஏற்கப்பட்ட ரூபா 4,937,034 செலவினத்திற்காக அதிகாரசபை யால் ரூபா 2,543,628 மீளாய்வாண்டின் போது மீளளிக்கப் பட்டிருந்தது. இதற்கு உரிய கணக்கீட்டுக் கொள்கை வெளிப்படுத்தப்பட்டிராததுடன் செயற் திட்டத்திற்கு உரிய செலவினமும் பெறப்பட்ட மானியம் கட்டுப்பாட்டுக் கணக்கினூடாக கணக்கீடு செய்யப்பட்டு ஆண்டின் இறுதியில் பெறவேண்டிய மீதியாக ரூபா 2,015,285 காண்பிக்கப்பட்டிருந்தது.	இந்த திட்டம் செயற்படுத்தப்படும் மூன்று மையங்களிலும் அனைத்து பாடநெறிகளும் இலவசமாக நடத்தப்படுகின்றன. இதற்கான நிதி வசதிகளை தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையில் இருந்து பெறப்படும் நிதி நிறுவனத்தின் வருமான மாகக் கணக்கிடப்பட்டால், நிறுவனத்தின் வருமான மாகக் கணக்கீடு செய்யப் படுமாயின் நிறுவனத் தின் வருமானம் செயற்கை ரீதியாக அதிக மதிப்பைக் காண்பிக்கும். எனவே, இந்த செயற்திட்டத்தின் பரிவர்த்தனைகளும் ஒரு கட்டுப்பாட்டுக் கணக்கி னூடாக கணக்கிடப்பட்டுள்ளன.	ஏனைய நிறுவனங்களிடமிருந்து திட்டங்களுக்காகப் பெறப்படும் வருமானம் மற்றும் செலவு களுக்கான கணக்கீட்டுக் கொள்கை வெளிப் படுத்தப்பட வேண்டும்.
(ஆ)	நிறுவனத்தின் மூலதன மானியக் கணக்கீட்டுக் கொள்கையின் படி மூலதன மானியங்கள் தொடர்பான நிலையான சொத்துகளின் தேய்மான அளவிற்கு விகிதாசார மாக காலக்கழிவு மீதி நிதிச்	நடப்பு ஆண்டில் மூலதன செலவினங்களுக்காக திறைசேரியால் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டிராத போதிலும் குறித்த மூலதன ஒதுக்கீடு களில் நடப்பாண்டின் போது	கணக்கீட்டு நியமங் களுக்கு இணங்க மூலதன மானியம் கணக்கீடு செய்யப் படுவதற்கான கொள்கை ரீதியான தீர்மானம்

செயலாற்றல் கூற்றிற்கு அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் பிற்போடப்பட்ட வருமானமாக பொறுப்புகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் பிற்போடப்பட்ட வருமானக் கணக்கில் இருந்து கழிக்கப்பட்டிருந்த காலக்கழிவுப் பெறுமதி ரூபா 16,712,556 ஆன போதிலும் ஆண்டின் போதான பெறுமானத் தேயய்வு ஒதுக்கீடு ரூபா 28,240,553 ஆனமையால் ரூபா 11,527,997 ஆன வேறுபாடு நிலவியது.	நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திறைசேரியால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. ஆதன் படி, ரூபா 16,712,556 தேய்மானத்தேய்வையும் ரூபா 10,547,552 ஆன ஏனைய மூலதனச் செலவினங்களையும் பிற்போடப்பட்ட வருமானக் கணக்கில் இருந்து கழிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அதன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.5.3 கணக்கீட்டுக் குறைபாடு

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் இறுதியில் அருவச் சொத்துக்கள் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்டிருந்த போதிலும், நிதிநிலை அறிக்கைகளில் அதன் பெறுமதியாக ரூபா 3,908,631 நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்ததன் காரணமாக சொத்துக்கள் அந்தத் தொகையால் அதிகரிதுக் காண்பிக்கப்பட்டிருந்தன.	2025 ஆம் ஆண்டிற்கான நிதி நிலைக் கூற்றில் சரியாக உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் கணினி மென்பொருள் முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டிருந்தமையால் 2025 ஆம் ஆண்டின் போது அது மீள்பெறுமதியிடப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.	முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்களின் மொத்த குறைத்தெழுதிய பெறுமதி வெளிப்படுத்தப்பட வேண்டும்.
(ஆ)	2022 முதல் 2024 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் நடைமுறைக் கணக்கொன்றிற்கு நேரடியாக செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 2,714,164 பாடநெறி வருமானம் அடையாளம் காணப்பட்டு கணக்கிடப் பட்டிருக்கவில்லை. பெறவேண்டிய பாடநெறிக் கட்டணத்தில் 2021 ஆம் ஆண்டில் தீர்க்கப்பட்ட ரூபா 745,000 மீதியும் உள்ளடக்கப்பட்டிருந்ததன் காரணமாக நடைமுறை சொத்துக்களின் மீதி அத் தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் வங்கியால் பெறப்பட்ட நேரடி பணப்பரிமாற்றங்களுக்கான வங்கி வைப்புச் சீட்டுகள் தொடர்ந்து பெறப்படுகின்றன. அந்த ஆண்டுகளில் இணக்கங்களுக்கு உட்பட்டிராத பணப்பரிமாற்றங்கள் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தில் 2025 ஆம் ஆண்டின் வருமானத்திற்கு செலவு வைக்கப்படுவதற்கும் 2021 ஆம் ஆண்டில் தீர்க்கப்பட்டிருந்த ரூபா 745,000 இற்கு உரித்தான மீதியையும் சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	ஆண்டிற்கான பாடநெறி வருமானம் பெறத்தக்க வருமானம் போன்று பெறவேண்டிய வருமானமும் துல்லியமாக அடையாளம் காணப்பட்டு கணக்கிடப்பட வேண்டும்.

1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை

சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
ஊழியர் கடன் வட்டியை ஊழியர் கடன் நிதியத் திற்கு மாற்றுவதற்கான திறைசேரி அங்கீகாரம்	2010 இல் பணியாளர் பத்திர இல. 585 இன் படி ஸ்தாபிக்கப்பட்ட ஒரு நிதியாகும். மேலும் இதற்கு திறைசேரி அங்கீகாரம் பெறப்படுவதற் கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. இருப்பினும், எதிர்காலத்தில் அந்த நிதியை முடிவுறுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.	திறைசேரி அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்
1.6.1 பெறவேண்டிய பணம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
வர்த்தகம் மற்றும் பிற பெறவேண்டிய மீதிகளின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 02 ஆண்டுகளுக்கும் மேலாக பெறவேண்டியிருந்த ரூபா 3,122,150 பாடநெறி கட்டணங்களை அறவிட்டிருக்கவில்லை.	02 ஆண்டுகளுக்கும் மேலான 2020, 2021, 2022 ஆம் ஆண்டுகளுக்கான பெற வேண்டிய இந் நிதி பணிப்பாளர் சபை அங்கீகாரத்திற்கு அமைய புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்படுவதற்கு 2025 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும்.	புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட முன்னர் பெறவேண்டிய பணத்தை அறவிடப்படுவதற்கு கூடுதலான முயற்சி எடுக்கப்பட வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு	இணங்காமை	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	1993 இன் 50 ஆம் எண் தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் 25(1)ஊ பிரிவு மற்றும் 1995 ஜூலை 28, ஆம் திகதிய 882 ஆம் இலக்க வர்த்தமானி அறிவிப்பின் பிரிவு (6) ஆம் பிரிவு	நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை ஐந்திற்கு மேற்படலாகாத போதிலும், 2025 ஆம் ஆண்டிற்கான பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை 06 ஆகும். அங்கு வர்த்தமானி அறிவிப்பில் பணிப்பாளராக பெயரிடப்படாத தொழில் மற்றும் தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சின் உதவிச் செயலாளர் பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார்.	1995 ஜூலை 28, இன் 882 ஆம் இலக்க வர்த்தமானி அறிவிப்பின் 6 ஆம் பிரிவின் படி, பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் அமைப்பு 5 ஆகும். 2025 ஆம் ஆண்டின் முதலாவது பணிப்பாளர் சபை கூட்டத்தில் பெறப்பட்ட அறிவுறுத்தல்களின் படி, தொழில் மற்றும் தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சின் உதவிச் செயலாளர் 2025 ஜனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் மாத பணிப்பாளர்	1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக் கல், ஆபரண அதிகாரசபைச் சட்ட ஏற்பாடுகள் மற்றும் 1995 ஜூலை 28 ஆம் திகதிய 882 ஆம் இலக்க வர்த்தமானி அறிவிப்பின் விதிகளின் படி பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் நியமிக்கப்படுவதற்கு நடவடிக்கை

			சபை கூட்டங்களில் பார்வையாளராகப் பங்கேற்றிருந்தார். மேலும் இந் நியமனத்தை சீராக்கித் தரும்படி தொழில் மற்றும் தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கு ஒரு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.	எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	2022 திசெம்பர் 14 ஆம் திகதிய 2310/29 ஆம் இலக்க அரச அதிவிசேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதி பகுதி 01, பிரிவு 139	ஒரு பதில் பணி நியமனம் அதிகபட்சமாக ஒரு வருட காலத்திற்கு மட்டுப்படுத்தப்பட வேண்டிய போதிலும் பணிப்பாளர் நாயகத்தின் பதவியும் பணிப்பாளர் (ஆராய்ச்சி) பதவிக்காக பதில் பணி நியமனங்கள் வழங்கப்பட்டு 2024 திசெம்பர் 31 அன்று, முறையே 2 ஆண்டுகளும் 3 ஆண்டுகளும் கடந்திருந்த போதிலும் குறித்த பதவிகளுக்கு பொருத்தமான அதிகாரிகள் நிரந்தரமாக நியமிக்கப்பட்டிருக்கவில்லை.	பணிப்பாளர் நாயகப் பதவியில் பதில் நியமனம் தற்போதைய பணிப்பாளர சபையால் 2025 ஏப்ரல் 30 வரை நீடிக்கப்பட்டுள்ளது. அதன் பின் மேற்கொள்ளப்படும் பதில் கடமை நியமனங்கள் கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.	பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை நடைமுறை விதிகளின் படி பின்பற்றப்பட வேண்டும், மேலும் பொருத்தமான அதிகாரிகள் நிரந்தரமாக நியமிக்கப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 4,919,535 தொகையான மிகை ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 5,796,846 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 877,311 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டை பார்க்கிலும் மீளாய்வாண்டின் பயிற்சி பாடநெறி வருமானம் ரூபா 5,295,225 இனாலும் திறைசேரி மானியங்கள் ரூபா 5,873,000 இனாலும் அதிகரித்திருந்த போதிலும், கலப்பு வருமானம் ரூபா 1,919,636 ஆல் குறைவடைந்து வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுகள் ரூபா 6,812,220 ஆலும் பராமரிப்புச் செலவுகள் ரூபா 1,530,471 ஆலும் அதிகரித்திருந்தமை இதற்கு முக்கிய காரணமாகியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	2017 - 2031 கால கட்டத்தில் ரூபா 300.65 மில்லியன் மதிப்பீட்டில் மேற்கொள்ளப் படும் என எதிர்பார்க்கப் படும் இலங்கையில் இரத்தினக் கல் ஆய்வு மற்றும் மதிப்பீட்டுத் திட்டத்தின் மூலம் 05 மாவட்டங்களின் 50 பிரதேச செயலகப் பிரிவுகளில் இரத்தினக் கல்	அமைச்சரவை அங்கீகாரம் பெற்ற இந்த திட்ட முன்மொழிவின் படி தேவையான திட்ட ஊழியர் களை ஆட்சேர்ப்பதற்கு தொடர்ச்சியான முயற்சிகள் எடுத்திருந்த போதிலும், இதுவரை குறித்த அங்கீகாரமும் இதற்குத் தேவையான ஏற்பாடுகளும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.	திட்டமிட்டபடி, 05 மாவட்டங்களின் 50 பிரதேச செயலகப் பிரிவுகளில் இரத்தினக் கல் படிவு ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகளும் வரைபடங்களும் வெளியிடும் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்

படிவுகளை ஆராய்ந்து அறிக்கைகள் மற்றும் வரைபடங்களை வெளியிட திட்டமிட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டின் இறுதிக் குள், ரூபா 30,589,687 செலவில் 04 மாவட்டங்களின் 17 பிரதேச செயலகப் பிரிவுகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, 17 பகுதிகளில் மாத்திரமே அறிக்கைகளும் வரைபடங் களும் வழங்கப்பட்டிருந்தன. இந்தத் திட்டத்தின் எதிர்கால செயற்பாடு குறித்து தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையுடன் முறையான உடன்பாட்டிற்கு வராததன் காரணமாக குறித்த அறிக்கையும் வரைபடங்களுடன் கூடிய காணிகள் ஏலம் விடுத்து உரிமங்களை வழங்கும் வரை தேவையான மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2017 முதல் 2021 வரையிலான காலகட்டத்தில் திட்டத்தால் அடையாளம் காணப்பட்ட சாத்தியமான இரத்தினக் கல் தளங்களின் ஏலத்திலிருந்து கிடைத்த வருமானத் தொகையான ரூபா 174.15 மில்லியன் 2022 முதல் 2031 வரையிலான கால கட்டத்தில் மேற்கொள்ளப் படவுள்ள ஆராய்ச்சிகளின் இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டச் செலவுகளை ஏற்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளன. எனினும், ஆராய்ச்சியின் மூலம் அடையாளம் காணப்பட்ட சாத்தியமான இரத்தினக்கல் காணிகள் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் ஏலமிடப்பட்டு இதிலிருந்து எந்த வருமானமும் ஈட்டப்பட்டிருக்கவில்லை.

இதன் விளைவாக, நிறுவனத்தில் தகுதிவாய்ந்த மூன்று புவியியலாளர்களை நியமித்து இந்த திட்டத்தை செயல்படுத்த வேண்டியிருந்தது. அவர்களில் இருவர் இராஜினாமா செய்தமையாலும், அந்த வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பதற்கு அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிராமையாலும் இது வரையில் நிரந்தர ஊழியர்களில் ஒரு ஆராய்ச்சி அதிகாரியிடம் இருந்து மாத்திரமே இந்த திட்ட மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதன் காரணமாக இத் திட்டத்தைத் தொடர்வது சிரமமாக உள்ளது.
இலங்கையில் உள்ள இரத்தினக்கல் படிவுகளை ஆராயும் அதிகாரம் எங்கள் நிறுவனத்திடம் ஒப்படைக்கப் பட்டிருந்த போதிலும், இந்த வழியில் கண்டுபிடிக்கப்பட்ட இரத்தினக்கல் சாத்தியமான காணிகளை ஏலமிடுவதற்கு நிறுவனத்திற்கு அதிகாரம் இல்லை. எனவே, இதற்காக அதிகாரமுள்ள தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைக்கு குறித்த இரத்தினக்கல் படிவுள்ள காணி நிலங்களின் விவரங்களை, வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது.
அமைச்சினதும் தலையீட் டால், இந்த விடயத்தை ஆய்வு செய்து அறிக்கை தயாரித்து சமர்ப்பிப்பதற்கு நிறுவனத்தின் தலைவரின் தலைமையில் தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள், அதன் அதிகாரிகள் மற்றும் நிறுவன அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவின் பணிகள் அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பட வேண்டியதுடன் எதிர்வரும் நடவடிக்கை களுக்காக தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையுடன் முறையான ஒருங்கிணைப்புடன் செயற்படவேண்டும்.

(ஆ)	அதிகரித்துவரும் தேவை யுடன் தொடர்புடைய விடயப் பரப்புகளை இனங்கண்டு இதனுடன் தொடர்புடைய 21 பயிற்சிப் பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட்டிருந்த போதிலும், இந்த ஆண்டில் 14 பாடநெறிகளுக்கு மாத்திரமே மாணவர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன் 7 பாடநெறிகளுக்கு எந்த விண்ணப்பதாரியும் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டில் இந்த 14 பாடநெறிகளுக்காக சேர்க்கப்பட்ட மாணவர் களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டைப் பார்க்கிலும் 1,577 இலிருந்து 1,334 வரை 14 சதவீதத்தால் குறைந் திருந்தது. முன்னைய ஆண்டில் செயற்படுத்தப் பட்ட இரத்தின வர்ண்ண தரம் பிரித்தல் மற்றும் சந்தைப்படுத்தல் பாடநெறி, இரத்தினக்கல் விலை மதிப்பீடு மற்றும் சந்தைப்படுத்தல் மற்றும் ஆபரண டிப்ளோமா போன்ற பயிற்சி பாடநெறிகள் நடத்தப்பட்டிருக்கவில்லை.	இரத்தினக்கல், ஆபரணத் தொழில் தொடர்பான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தை ஆய்வுகளின் படி, அதிக தேவைப்பாடும் தொழில் துறைப் பயிற்சி கொண்ட 21 பாடநெறிகள் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக் குழுவின் தரங்களுக்கு இணங்க தயாரிக்கப் பட்டுள்ளன. விடயப் பரப்பிற்கு உரித்தாக திறனுக்கு ஏற்ப பல பாடப்பிரிவுகளின் கீழ் பாட நெறிகள் திட்டமிடப்பட்டுள்ளன. இவ்வாறே, இரத்தினக்கல், ஆபரணத் தொழிலுக்கு உரித்தான சில பாடநெறி களுக்காக உள்ள கேள்வி குறைவு காலப்போக்கில் குறைவிற்கு உட்படுகிறது. இவ்வாறே பயிற்சிப் படிப்புகளை செயற்படுத்து வதற்காக நிலவும் வரையறுக்கப்பட்ட வளாக வசதிகள் மற்றும் கல்வி மற்றும் கல்விசாரா பதவியணி நிலையான/ வெளிப் பற்றாக்குறை காரணமாக, இவ்வாறு பாடநெறிகளை மட்டுப்படுத்த நேர்ந்துள்ளது.	திட்டமிட்டபடி பாடநெறிகளைச் செயற்படுத்தி மாணவர்களைச் சேர்ப்பதன் மூலம் நிறுவனம் இதை அடைய வேண்டும்.
(இ)	நிறுவன இணையதளம் நிகழ்காலத்திற்குப் பொருந் தும் வகையிலும் தற்போதைய நிலைமைகள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கி நாளது வரையாக பேணப்பட்டிருக்க வில்லை.	தற்போது பழுதடைந்த நிலையில் உள்ள 2010 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட நிறுவன இணையதளத்தின் மறுவடிவமைப்புக்கான திட்ட முன்மொழிவு தயாரிக்கப்பட்டு, 2025 ஆம் ஆண்டிற்கான வருடாந்த ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. மேலும் இதுவரையில் அமைச்சுப் பிரதிநிதியைக் கொண்ட ஒரு குழு மூலம் பெறுகை செயல்முறை மூலம் வரையறுக்கப்பட்ட டெலிகாம் (சேவைகள்) நிறுவனத்திற்கு கேள்வி வழங்கப்பட்டுள்ளது.	நிறுவனத்தின் இணையதளம் புதுப்பித்த நிலையில் வைத்திருக்க வேண்டும்.

3.3 குறைப்பயன்பாடுடைய நிதியங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	நிறுவனத்தின் இரத்தினபுரி மாவட்ட அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 14,204,402 செலவில் 30 ஆண்டு குத்தகை அடிப்படையில் கையகப்படுத் தப்பட்ட காணி, மீளாய் வாண்டின் இறுதிக்குள் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிராததன் காரணமாக காணி, 08 ஆண்டுகளுக்கும் மேலாக விளைவற்ற நிலையில் இருந்தது.	இந்த காணியில் ஒரு கட்டிடத்தை நிர்மாணிக்கும் நோக்கத்துடன் இது 2021-2025 ஐந்தாண்டுத் திட்டத்திலும் உள்ளடக்கப் பட்டிருந்தது. நாட்டில் நிலவிய COVID-19 நோய் தொற்று சூழ்நிலை மற்றும் எழுந்த சமூக மற்றும் பொருளாதார சூழ்நிலை காரணமாக அரசாங்க செலவினங்கள் மட்டுப் படுத்தப்பட்டதன் காரண மாக காணியில் ஒரு கட்டிடத்தை நிர்மாணிக்குத் தேவை யான ஒதுக்கீட்டைப் பெற முடியாதிருந்தமை யால், இது குறித்த எதிர்காலப் பணிகள் தாமதமாகியுள்ளன.	காணிக் கொள்வனவு நோக்கத்தை அடைவதற்குரிய நடவடிக்கைகள் திட்டமிட்டு செயற்படுத்தப்பட வேண்டும்.
(ஆ)	இரத்தினக் கற்களை எரிப்பதற்காக 2013 ஆம் ஆண்டில் ரூபா 10,977,344 இற்கு ஒரு மின்சார அடுப்பு கொள்வனவு செய்யப்பட்டு 06 ஆண்டுகள் செயற்படாதிருந்தது. 2020-2021 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது ரூபா 3,953,540 செலவில் உதிரி பாகங்கள் மற்றும் மின்சுற்றுகளைப் பயன்படுத்தி இயந்திரம் மேம்படுத்தப்பட்டது.. 2020-2021 ஆம் ஆண்டில், இந்த இயந்திரம் 05 ஆராய்ச்சி ஓட்டங்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தது, மேலும் மீளாய்வாண்டின் இறுதியிலும் இயந்திரம் செயற்படாதிருந்தது.	இந்த மின்சார அடுப்பு கொள்வனவு செய்யப்பட்டு இரத்தினபுரி மையத்தில் நிறுவப்பட்டிருந்த போதிலும், அதை இயக்க தேவையான மின்சாரம் வழங்குவதற்கும் ஜெனரேட்டர் இன்மையாலும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு இதைப் பயன்படுத்த முடியவில்லை. ஆகையால் தேசிய இரத்தினககல், ஆபரண அதிகாரசபையின் இரத்தினபுரி மையத்தில் இந்த அடுப்பை நிறுவ தேவையான ஜெனரேட்டரை வழங்குவதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. 2020 முதல் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு இந்த உலை சிறந்த நிலையில் பயன்படுத்தப்பட்டு வந்த போதிலும், இதுவரையில் சுமார் 12 ஆண்டுகள் பழமையான உலையின் பிரதான தளத்தின் கட்டுப்பாட்டு அலகின் குறைபாடு காரணமாக தற்போது செயற்படவில்லை. குறித்த பாகங்களை ஒரு சேவை ஒப்பந்தத்தின் கீழ் உலை வழங்குனரூடாக தாய் நிறுவனத்திடமிருந்து மாற்றிக்கொள்வதற்காக	சொத்துக்களை சரியான செயற்பாட்டு நிலையில் பராமரிக்கவும், செயற்பாட்டு நோக்கங்களுக்காக அவற்றைப் பயன்படுத்தவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

	பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.	

3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	பணிப்பாளர் (ஆராய்ச்சி) பதவி 2011 ஜுன் மாதம் பதவியணி அங்கீகரிக்கப் பட்ட நாளிலிருந்து வெற்றிட நிலையில் காணப்பட்டதுடன் ஆராய்ச்சி நடவடிக்கை களுக்காக அங்கீகரிக்கப்பட்ட 19 சிரேஷ்ட பதவிகளில் 15 வெற்றிடமாக இருந்தன. மேலும், ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட மொத்த 50 பதவிகளில் 42, அதாவது 84 சதவீதம் காலியாக இருந்தமை, நிறுவனத்தின் முக்கிய பணித் துறையான ஆராய்ச்சி நடவடிக்கைகளை வெற்றிகரமாக செயல்படுத்து வதற்கு ஒரு தடையாக இருந்தது.	நிறுவனத்தின் பதவியணி அங்கீகரிக்கப்பட்ட நாளிலிருந்து வெற்றிடமாக உள்ளது. தற்காலிக அடிப்படையில் 03 ஆராய்ச்சி அதிகாரிகள், 02 விரிவுரையாளர்கள் மற்றும் 02 முகாமைத்துவ உதவியாளர்களை நியமிக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக அமைச்சின் மூலம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத் திற்கு கடிதங்களை அனுப்பிய போது, தேசிய இரத்தினக் கல், ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் இணைக்கப்படும் நடவடிக்கைகள் முடிவடையும் வரை இந்த ஆட்சேர்ப்புகளை செய்ய வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டது. ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு ஏற்ப பொருத்தமான அதிகாரிகள் ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டாம் என அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன.	ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் படி தகைமையுடைய உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்து, ஆராய்ச்சிகளுக்கான உரிய நிறுவனங்களின் நோக்கங்களை எய்துவதற்கும் நடவடிக்கை எடு:க்கப்பட வேண்டும்.
(ஆ)	நிறுவனத்தின் பயிற்சிப் பணிகளுக்காக அங்கீகரிக்கப் பட்ட 06 சிரேஷ்ட பயிற்சி அதிகாரி பதவிகள், 04 விரிவுரையாளர் பதவிகள் மற்றும் 23 பயிற்சி அதிகாரி பதவிகளில் 10 வெற்றிட நிலையில் இருந்தமையால், நிறுவனத்தின் பயிற்சிப் பணிகளை மேற்கொள்கை யில் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தது. பணிப்பாளர் (பயிற்சி மற்றும் மேம்பாடு) பதவிவகிக்கும் அதிகாரி, பதில் கடமை யாற்றும் பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருந்ததன்	தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை யையும் இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தையும் இணைக்கும் நடவடிக்கைகள் நிறைவு பெறும் வரை இந்த ஆட்சேர்ப்பை மேற்கொள்ள வேண்டாம் என முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அறிவுறுத்தல்களை வழங்கி யுள்ளது. இரத்தினக்கல், ஆபரணத் தொழிலுக்கு உரிய தொழில்நுட்ப மற்றும் முறையான அறிவைக்	ஆட்சேர்ப்பு நடைமுறையின் படி, தகைமை பெற்ற உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்து நிறுவன இலக்குகளை அடைவதற்காக பயிற்சிப் பணிகளை உயர் செயற்திறனுடன் செயற்படுத்த வேண்டும்.

காரணமாக நிறுவனத்தின் பயிற்சிப் பணிகளுக்கு அவரது பங்களிப்பைப் பெற முடியவில்லை.

இரத்தினக்கல், ஆபரண தொழில் தொழில்நுட்பம், கைவினைஞர் மற்றும் சந்தைப்படுத்தல் துறைகளில் தற்போது பாரிய மாற்றத்திற்கு உட்பட்டிருந்த காரணத்தால், இதற்குப் பொருத்தமான கல்வித் தகுதிகளைக் கொண்ட கல்விப் பணியாளர்கள் உள்ளமை அத்தியாவியமான போதிலும், பயிற்சித் துறையில் பணிபுரியும் பெரும்பாலான ஊழியர்கள் சான்றிதழ் படிப்புகளை படித்த சாதாரண தொழில்நுட்ப திறன் பணியாளர்களான காரணத்தால் புதிய தொழிநுட்ப முறைகள் மற்றும் நுட்பங்கள் குறித்த பயிற்சி வழங்குவது ஒரு சவாலிற்கு உட்பட்டிருந்தது.

கொண்ட உயர் கல்வி பெற்றவர்களின் எண்ணிக்கை மிகக் குறைந்த மட்டத்தில் உள்ளது. இருப்பினும், முடிந்தவரை படிப்புகளை நடத்துவதற்காக, பட்டம், முதுகலை (டிப்ளோமாக்கள், முதுகலை, பிஎச்டி) மட்டத்தில் வரையறுக்கப் பட்ட வெளிப்புற பயிற்சி அதிகாரிகளை நியமிக்க நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்தத் துறை தொடர்பான பட்டப்படிப்புத் தகைமை களைப் பெறுவதற்கு இயலுமான வகையில் பட்டப் பாடநெறிகளை உருவாக்கி வருவதுடன் 2024 ஆம் ஆண்டு முதல், இந்தத் துறையில் சர்வதேச தகுதியான பிரித்தானிய இரத்தினவியல் தகுதி (ஜெம் - எ - பெல்லோஷிப் ஆ.்.ப் கிரேட் பிரிட்டன்) படிப்பதற்கான வசதிகளும் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

.